இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 280 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 08 – வெள்ளிக்கிழமை 22 மே 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 280 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 08 - Friday 22 May 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


# உடன்பிறப்பே..! ஜூன்-3 நம் புத்தெழுச்சி நாள்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

ஒவ்வொரு நாளும் அண்ணா அறிவாலயத்திற்குத் திரண்டு வரும் உடன்பிறப்புகளின் முகம் கண்டு, உங்களில் ஒருவனான நான் ஊக்கம் பெறுகிறேன். என்னைக் கண்ட நொடியில், உடன்பிறப்புகள் தங்கள் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த கவலையிலிருந்து விடுபடுகிறார்கள். அவர்களின் உணர்வு மழையில் நான் நனைகிறேன். திருச்சி, தஞ்சை ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்தபோதும் உடன்பிறப்புகளின் உணர்வைக் கண்டேன். சமூக வலைதளங்களில் பதிவிடும் ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகளின் உணர்வுகளையும் கவனிக்கிறேன். தேர்தல் முடிவுகளைக் கடந்த கழக உணர்வே நம் வலிமை.

**வெற்றி பெற்றால் வெறிக் கூத்தாடுவதுமில்லை; தோல்வி கண்டால் துவண்டு விடுவதுமில்லை. இது நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் நமக்குக் கற்றுத் தந்த அரசியல் பாடம்.**

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு 50 ஆண்டுகாலம் இந்த இயக்கத்தைக் கட்டிக் காத்த மகத்தான தலைவரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேர்தல் களத்தில் பெறாத வெற்றியுமல்ல, அடையாத தோல்வியுமல்ல. தேர்தல் முடிவுகள் எப்படி இருந்தாலும் அவரது பயணமும் கழகத்தின் பயணமும் ஓய்வதேயில்லை.

**தோல்வியடைந்த தேர்தல்களுக்குப் பிறகுதான், சுவரில் அடித்த பந்து போல கழகம் அதிக வேகத்துடன் திரும்பவும் (bounce back) களத்திற்கு வரும். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் என்பது இனம் - மொழி காத்திடும் சமூகநீதி இயக்கம். தமிழ்மொழிக்காகத் தன்னுயிரைத் தந்த தியாகத் தொண்டர்களின் இயக்கம். தமிழ்நாட்டின் நலன் காக்க சிறை கண்ட தலைவர்களின் இயக்கம். துரோகங்களை எதிர்கொண்டு முறியடித்த இயக்கம். தோல்வியைப் படிக்கட்டுகளாக்கித் திரும்பத் திரும்ப வென்று காட்டும் வலிமை கொண்ட இயக்கம்.**

முத்தமிழறிஞர் கலைஞர் தன் உடன்பிறப்புகளுக்காக முரசொலியில் எழுதிய கடிதங்கள் பலவற்றில் கழகத்தினர் பற்றி அடிக்கடி குறிப்பிடுவார், “அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல இல்லாமல், கொட்டியும் ஆம்பலும் போல எப்போதும் உடனிருப்பவர்கள்தான் என் உண்மையான உடன்பிறப்புகள்” என்று சொல்வார். கோடைக்காலத்தில் குளம் வற்றியதும், அதுவரை அதில் தண்ணீர் குடித்து வந்த பறவைகள் வேறு இடம் தேடிப் போய்விடும். இது மற்றவர்கள் இயல்பு. ஆனால், குளத்தின் கரையோரமாக வளர்ந்த செடி கொடிகளான கொட்டி, ஆம்பல் போன்றவை எந்த நிலையிலும் அந்தக் குளத்துடனேயேதான் இருக்கும். இதுதான் தி.மு.க. உடன்பிறப்புகளின் உணர்வு. அந்த உணர்வை நமக்கு ஊட்டி வளர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் ஊட்டிய உணர்வுதான் இன்றும் நம்மை பெரியார் - அண்ணா கொள்கைப் பார்வையுடன் வழிநடத்துகிறது.

**தமிழ்நாட்டின் அரசியல் போக்கைத் தீர்மானிக்கும் இயக்கமாக இப்போதும் தி.மு.க.தான் இருக்கிறது. அதன் வலிமையைப் பெருக்குகின்ற வகையில், கழகத்தின் அமைப்பு முறையில் மிகப்பெரிய அளவிலான மாற்றங்களைச் செய்வதற்கு உங்களில் ஒருவனான நான், உரிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறேன். உடன்பிறப்புகள் அனைவரின் பங்களிப்பும் சிறந்த முறையில் வெளிப்படும் இயக்கமாகக் கழகம் திகழும்.**

## உங்களில் ஒருவன்

உங்களால் கழகத் தலைவராக நான் பொறுப்பேற்றிருந்தாலும், உங்களைப் போல நானும் முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புதான். கழகத்தின் முதன்மைத் தொண்டன் என்ற உணர்வுடனேயே என் பணியினைத் தொடர்கிறேன். நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரிடம் நேரில் கற்ற அரசியல் பாடத்தை நெஞ்சில் ஏந்தி, நம் கழகப் பயணம் என்றென்றும் தொடர்ந்திடும்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த ஜூன் 3-ஆம் நாள் வந்தாலே ஒவ்வொரு ஆண்டும் நம் உடன்பிறப்புகள் அனைவருக்கும் புத்துணர்வு ஏற்படும். சோர்வு - கவலை - விரக்தி எல்லாவற்றையும் ‘கலைஞர்’ எனும் குருதியுடன் கலந்த உணர்வு விரட்டியடித்து, களத்தில் நம்மை ஊக்கத்துடன் பணியாற்றச் செய்யும். கலைஞரின் உடன்பிறப்புகளான நமக்கு ஊக்கமும் உற்சாகமும் தருவதற்காகவே வரவிருக்கிறது, ஜூன் 3.



**நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் 103-ஆவது பிறந்தநாளான வரும் ஜூன் 3-ஆம் நாள், நமக்கான புத்தெழுச்சி நாளாக அமையட்டும். தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவோம். கழகக் கிளைகள் எங்கும் கருப்பு - சிவப்பு இருவண்ணக் கொடி உயர்ந்து பறக்கட்டும். நலிந்தோருக்கும் - ஏழைகளுக்கும் உதவி செய்யும் நிகழ்வுகள் நடக்கட்டும். 75 ஆண்டுகளைக் கடந்த இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மூத்த முன்னோடிகளுக்கு உதவிடும் வகையில் தலைவர் கலைஞரின் பிறந்தநாளைக் கழக நிர்வாகிகள் கொண்டாட வேண்டும்.**

கடந்த இரண்டு வாரங்களாக கழகத்தில் புதிய இளைஞர்களின் பங்களிப்பை சமூக வலைதளங்களில் அதிகளவில் காண்கிறேன். தகவல் தொழில்நுட்பத்திற்கான கொள்கையை வகுத்து, தமிழ் இணைய மாநாட்டினை நடத்தி, இன்றைய டிஜிட்டல் பெரும்பாய்ச்சலுக்கு அன்றே வழிவகுத்த **முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை இளைய தலைமுறை நினைவில் கொண்டு, எக்ஸ் (ட்விட்டர்) - இன்ஸ்டாகிராம் - யூடியூப் - ஃபேஸ்புக் - வாட்ஸ்அப் என அனைத்துத் தளங்களிலும், நவீனத் தமிழ்நாட்டை வடிவமைத்த சிற்பியான தலைவர் கலைஞரின் வரலாற்றுச் சாதனைகளைக் காணொலிகளாகப் பரப்புங்கள்.**

தி.மு.க.வினரான நம் பயணம் ஒருநாளும் ஓயாது, என்றென்றும் தொடரும் என ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் மீது ஆணையிட்டு உறுதியேற்போம்! தமிழ்நாட்டின் நலன் காக்க மேலும் அதிகமாக உழைத்திடுவோம்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2057
வைகாசி 06
20-05-2026.

## த.வெ.க. ஆட்சியில் ஊரக உள்ளாட்சித் துறையில் ஒரு உலக அதிசயம்!

# காலையில் டெண்டர்; மாலையில் பணி ஆணை!

## அதிசய டெண்டர் வழங்கி மக்களை ஆச்சரியப்படுத்திய ஆட்சி!

**சென்னை, மே 22 -**

**உலகத்திலேயே முதல் முறையாக த.வெ.க. ஆட்சியில் காலையில் டெண்டர் விடப்பட்டு, மாலையில் பணி ஆணை வழங்கப்பட்டது. ஊரக உள்ளாட்சி துறை அமைச்சர் புஸ்சி ஆனந்த் துறையில்தான் இந்த அதிசயம் நடந்தது.**

த.வெ.க. ஆட்சிக்கு வந்தால் தூய சக்தி ஆட்சி நடைபெறும் என்றும், ஒரு துறையிலும் ஒரு பைசாகூட ஊழல் நடக்காது, எல்லா பணிகளும் மிகவும் நேர்மையாக நடக்கும் என்று அக்கட்சியின் தலைவரும், முதல்வருமாக விஜய் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் பேசி வந்தார். பொதுமக்களும் இனி தமிழ்நாட்டில் ஊழலே நடக்காது, எல்லாம் வெளிப்படையாக நடைபெறும் என்று நம்பி வாக்களித்தனர். இந்த நிலையில்தான் தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி துறையில் ஒரு உலக அதிசயம் நடந்துள்ளது.

அதாவது காலையில் டெண்டர் வழங்கப்பட்டு, அன்று மாலையே டெண்டர் ஓப்பன் செய்யப்பட்டு, அடுத்த ஒரு மணி நேரத்தில் பணி ஆர்டர் வழங்கப்பட்ட சம்பவம்தான் இன்று தமிழகம் முழுவதும் சமூகவலைதளத்தில் பேசும் பொருளாக உருவாகியுள்ளது.

அதாவது காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் பஞ்சாயத்து யூனியன் வட்டார வளர்ச்சி அலுவலர் ஒரு இ-டெண்டர் வெளியிட்டுள்ளார். அதில், காஞ்சிபுரம் மாவட்டம் கோனேரிகுப்பம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட காரப்பேட்டை கிராமத்தில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட உயர்நிலை நீர்தேக்கம் தொட்டி கட்டுமானப் பணிக்காக ரூ.16 லட்சத்து, 83 ஆயிரத்து 194 மதிப்பில் ஒப்பந்தம் கோரப்பட்டு இருந்தது.


### பத்திரிகையில் விளம்பரம் இல்லை!

இதில் அடுத்து நடந்ததுதான் சுவாரஸ்யம். அதாவது, 19ம் தேதி காலை 9 மணிக்கு டெண்டர் கோரும் அறிவிப்பு வெளியானது. மாலை 3 மணிக்குள் டெண்டருக்கு விண்ணப்பிக்க வேண்டும். மாலை 4 மணிக்கு டெண்டர் ஓப்பன் செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. அதாவது, டெண்டர் பணிகள் அனைத்தும் 6 மணி நேரத்துக்குள் முடிவடையும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்தது. இந்த டெண்டர் தொடர்பான தகவல்கள் எதுவும் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படவில்லை என்பது கூடுதல் தகவல் ஆகும்.

இதுபோன்ற டெண்டர் தமிழக அரசால் கோரப்படுவது உலகத்திலேயே இதுதான் முதல் முறை என்று ஊரக உள்ளாட்சி அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போது ஊரக உள்ளாட்சித் துறை அமைச்சராக இருப்பவர் புஸ்சி ஆனந்த். அவரது துறை மூலமே இந்த டெண்டர் கோரப்பட்டு இருந்தது.

### அதிசய டெண்டர்!

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், புஸ்சி ஆனந்த் அமைச்சராக அதிகாரப்பூர்வமாகப் பொறுப்பேற்று 2 நாள் தான் ஆகிறது. அதற்குள் இப்படி ஒரு அதிசய டெண்டர் வழங்கி, தமிழக மக்களை ஆச்சரியப்படுத்தியுள்ளார்.



ஆனால், இந்த டெண்டர் விவகாரம் பற்றி சமூகவலைதளத்தில் தகவல் வெளியாகி வைரலானது.